# புகழ்ச்சிக் கூட்டநற்செய்தி

2017 மார்கழி மாதம் 04ம் திகதி முதல் 10ம் திகதி வரை

***"அப்பா தந்தையானவரின் இல்லத்தில் நாம் தங்குகின்ற இன்னுமொரு முக்கியமான தரிப்பிடம் வரவேற்பறை***

01. ஆரம்பப் புகழ்ச்சிக்காக

- திருப்பாடல் 27:4 **"நான் ஆண்டவரிடம் ஒரு விண்ணப்பம் செய்தேன். அதையே நான் நாடித் தேடுவேன். ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும். அவரது அழகை நான் காண வேண்டும். அவரது கோவிலில் அவரது திருவுளத்தைக் கண்டறிய வேண்டும்."**
- தந்தையானவரின் அரவணைப்பிற்கு செல்லும் பயணமாகும். பரிசுத்த ஆவியானவர் எம்மை இவ்வாறு அழைத்து செல்கின்றார். ஆகையால் பரிசுத்தஆவியானவர் எம்மை ஆட்கொள்வதற்கு இடமளித்தவாறு, எமது இதயங்களில் ஆழமான தாகத்தை ஏற்படுத்திக் கொள்வோம்.
- புபுது பாடல் இல 294 "அழைத்து சென்றருள்வீர்….."

02. கடந்த வாரத்தின் அனுபவங்களை பகிர்ந்துக் கொள்வோம்.

- எனது மணித்தியாலம் செபவாழ்வை முன்கொண்டு
- நாளாந்த வாழ்வில் நிகழ்வுகளை முன்கொண்டு
- இவை அனைத்திற்காகவும் இறை ஆண்டவரைப் புகழ்வோம்.

03. நாளுக்குரியநற்செய்தி

- புபுது கரிஸ்மா உங்களது/எனது வாழ்வின் அடித்தளமாக வேண்டும். புபுது கரிஸ்மாவினுள் கிறிஸ்துநாதரை நோக்குவதற்கு புபுது மக்கள் என்றவகையில் நாம் அவரது விசேடமான அனுக்கிரகத்தை பெற்றுள்ள படியினால் அப் பரிசிற்காக இறை ஆண்டவருக்கு ஒருகணம் நன்றி கூறுவோம்.
- இங்கு கீழ்காணும் வேதாகம பகுதிகளை வாசித்து பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்து நாதரை முன்கொண்டு வெளிப்படுத்துவதை சிறு குழுக்களினுள் பகிர்ந்துகொள்ளவும்.
- மார்கழி மாதம் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நற்செய்தி புனித மாற்கு 1:1-8
- இறை புத்திரரான இயேசு கிறிஸ்துநாதரை பற்றிய நற்செய்தியின் ஆரம்பம் இதுவே…. …. **"இதோ என் தூதனை உமக்கு முன் அனுப்புகிறேன் அவர் உமக்கு வழியை ஆயத்தம் செய்வார். பாலை நிலத்தில் குரல் உன்று முழங்குகிறது. ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள் அவருக்காகப் பாதையைச் செம்மையாக்குங்கள்………"** (முழுமையாக வாசிக்கவும்.)

04. வார்த்தையின் ஊழியாக்காக

- வரவேற்பறை என்பது இறை தந்தையானவரின் இல்லத்தில் நாம் தங்குகின்ற இன்னுமொரு முக்கியமான தரிப்பிடமாகும். ஆழமான அமைதி அரசாலும்

நிலையாகும். இங்கு பரிசுத்த வேதாகமம், அதேபோல் பலவிதமான புத்தகங்கள் வழியாக கிறிஸ்துநாதரை நோக்க முடியும்.

- புனித மாற்கு நற்செய்திக்கு ஏற்ப ஸ்நாபக அருளப்பர் வழியாக பரிசுத்த ஆவியானவர் எமக்கு கிறிஸ்து நாதரைப் பற்றி என்ன கூறுகின்றார்?
- நாம் எதிர்பாராத சந்தர்ப்பத்தில் கிறிஸ்துநாதர் எம்மிடம் வருகின்றார் என்பதை நாம் நிரந்தரமும் தியானிக்க வேண்டும். இவ் வார்த்தை எமது மரணத்தை குறித்த அச்சுறுத்தலாக கருதுவதற்கு நாம் பழகி உள்ளோம். அது மாத்திரமல்ல அதைவிட மேலான விளக்கத்தை கொடுக்கலாம். அதாவது நாம் எதிர்பாராத கணத்தில் எதிர்பாராத விதத்தில் அவர் எம்மை சந்திக்க வருவார். அதற்கு விழிப்புறுங்கள். அவரைஏற்று கொள்ளுங்கள். ஒவ்வொரு கணமும் கிறிஸ்து நாதர் பரிசுத்த ஆவியானவரினால் எம்மை ஸ்நானம் செய்கின்றார். அபிஷேகம் செய்கின்றார்.
- இறை தந்தையின் மகனாக, மகளாக வாழ்வதற்கு எம்மை அழைக்கின்றார்.
- ஆகையால் நாம் மனம் வருந்தி மனமாற்றம் அடைவோம். ஆழமான மனம் வருந்துதலுக்கு உள்ளாக வேண்டும்.
- இயேசுகிறிஸ்து நாதருடைய மனித புத்திரத்தன்மை, இறை புத்திரத்தன்மை இவ்வாறு எமது மனித புத்திரத்தன்மைக்கு சவால் விடுகின்றது.
- அப்படியானால் இறை புத்திரத்தன்மைக்கு எம்மை ஜனிப்பிக்கும் (புதியபிறப்பு) எமது வாழ்வின் எல்லா சந்தர்ப்பங்களையும் பிரயோசனப்படுத்திக் கொண்டு இறை மகனான கிறிஸ்துநாதரைப் பற்றிய நற்செய்தியை மற்றவர்களுக்கு சாட்சி பகிர்வதற்கு எம்மை அழைக்கின்றார்.

05. இறுதி செபம்.–

‘எனது மனித்தியாலம்’ பயணத்தினுள் வரவேற்பு அரையினுள் அனுபவத்தை முன்கொண்டு கிறிஸ்துநாதரை முன்கொண்டு சாட்சி பகிர்வோம். எமது அனுபவங்களை தினமும் மற்றவர்களுடன் சங்கமமாக்கிக் கொள்வோம்.

புபுது பாடல் இல. 221 “இயேசுவே ஆண்டவர்…..”